# அவள் எவ்வாறு கணிக்கப்படுகிறாள்

1953 முதல் 2022 வரை இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

**செயல்முறைச் சுருக்கம்**

மார்ச் 2025

# அவள் எவ்வாறு கணிக்கப்படுகிறாள்

1953 முதல் 2022 வரை இந்தியாவில்
பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

**செயல்முறைச் சுருக்கம்**

மார்ச் 2025

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு

# அவள் எவ்வாறு கணிக்கப்படுகிறாள்

1953 முதல் 2022 வரை இந்தியாவில்
பெண்களுக்கு எதிரான குற்றங்கள்
**செயல்முறைச் சுருக்கம்**

பதிப்பு 1.0

மார்ச் 2025

Creative Commons License 4.0 BY NC SA

இந்த செயல்முறைச் சுருக்கத்தின் சமீபத்திய தமிழ் பதிப்பு
https://hrf.net.in/wp-content/uploads/VAWG-HSF-Executive-Summary-Tamil.pdf

இந்த செயல்முறைச் சுருக்கத்தின் சமீபத்திய ஆங்கில பதிப்பு
https://hrf.net.in/wp-content/uploads/VAWG-HSF-Executive-Summary.pdf

முழு அறிக்கையின் சமீபத்திய ஆங்கில பதிப்பு
https://hrf.net.in/wp-content/uploads/VAWG-howshefigures-ncrb-and-meta-data-1953-2022.pdf

முழு அறிக்கையின் சமீபத்திய தமிழ் பதிப்பு
https://hrf.net.in/wp-content/uploads/VAWG-howshefigures-ncrb-and-meta-data-1953-2022-Tamil.pdf

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**
m: +91 86680 91453 | e: womensrights@hrf.net.in | w: www.hrf.net.in

# செயல்முறைச் சுருக்கம்

> இந்திய மக்களாகிய நாம்... நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் சமூகநீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதியை உறுதிப்படுத்த உளப்பூர்வமாக தீர்மானிக்கிறோம்.
>
> *இந்திய அரசமைப்பு சாசனம், முகவுரை*

இந்திய மக்களாகிய நாம் அவ்வப்போது 'தேசத்தின் மனசாட்சியை உலுக்கும்' சம்பவங்களை சந்திக்கிறோம், சிறிது நேரம் ஆவேசப்படுகிறோம், பிறகு இயல்பு நிலைக்குத் திரும்பி அந்த ஆவேசம் மட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளபடி கடுமையான சம்பவங்கள் மோசமான சட்டத்தையும் மிக மோசமான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்துகின்றன.

*அவள் எவ்வாறு கணிக்கப்படுகிறாள்* என்ற இந்த ஆவணம் நமக்கு இரைச்சலைக் குறைக்க உதவுகிறது, பகுத்தறிவுப் பூர்வமான எதிர்வினைகள், பயனுள்ள நிவாரணங்கள், நிலையான தீர்வுகள் ஆகியவற்றுக்கான முன்னெடுப்புகளில் கவனம் செலுத்தவும் உதவுகிறது; அதற்காக *தேசிய குற்றப்பதிவு நிறுவனத்தின்* (NCRB) 1953 முதல் 2022 வரையிலான வருடாந்திர இந்தியாவில் குற்றங்கள் அறிக்கைகளிலிருந்து பெறப்படும் தரவுகள், சம்பந்தப்பட்ட சட்டங்கள், இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவை பயன்படுத்தப்படுள்ளன. எண்ணிக்கைகள் உங்களுக்கு முக்கியமானவை என்றால், ஆதாரங்களுக்கு நீங்கள் முன்னுரிமை அளிப்பவர் என்றால் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான குற்றங்கள் தொடர்பாக நீங்கள் எதிர்பார்த்திருந்த புத்தகம் இதுதான்.

### 1.1 ஒரு பொதுவான கண்ணோட்டம்

இந்த அறிக்கையை மூன்று பாகங்களாகப் பொதுவாக பிரிக்கலாம்.

பாகம் I ஆவணத்தின் உள்ளடக்கங்களையும், தரவுகளின் பின்னணிக் கதைகளையும் தொட்டுக்காட்டுகிறது (அத்தியாயங்கள் 1-3).

பாகம் II (அத்தியாயங்கள் 4-7) பதிவு செய்யப்பட்ட தரவுகள் வெளிப்படுத்தும் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான குற்றங்களின் தற்போதைய நிலைமைகளை எடுத்துக்காட்டும் வகையில் ஒரு விரிவான ஆய்வாக இருக்கிறது.

பாகம் III (அத்தியாயங்கள் 8, 9) அமைப்பு சார்ந்த நிவாரணங்களுக்கும் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கும் ஆலோசனைகளை முன் வைக்கிறது.

தரவுகள் நிரம்பியுள்ள இந்த அறிக்கையைப் படிப்பது சிலருக்கு பளுவாக இருக்கலாம், தரவுகளை நீங்கள் தவிர்க்க விரும்பினால் ஆரம்பத்திலிருந்து தொடங்குங்கள், உள்ளடக்கங்கள், வரலாறு, தரவுக் கதைகள், அவை சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் ஆகியவற்றில் நிதானமாகச் சுற்றி வாருங்கள், தரவு அத்தியாயங்களை (அத்தியாயங்கள் 5-7) தவிர்த்து விடுங்கள், தீர்வு நடவடிக்கைகளுக்கு நேரடியாக செல்லுங்கள். உண்மையிலேயே மிகுந்த அவசரத்தில் இருப்பவர்களின் வசதிக்காக, இந்தச் செயல்படுத்தலுக்கான சுருக்கத்தின் பிற்பகுதியில், நாங்கள் கண்டறிந்த உண்மைகளும் பரிந்துரைகளும் தரப்பட்டுள்ளன.

முதல் இரண்டு அத்தியாயங்களும் உள்ளடக்கங்களை தெரிவிக்கின்றன. அடுத்த அத்தியாயம் இந்திய அளவில் குற்றப் பதிவுகளின் வரலாற்றையும், தொடர் முன்னேற்றத்திற்கான குழப்பமிகுந்த முயற்சிகளையும் பின்தொடர்கிறது. பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான வன்முறைகளை இந்தியா எவ்வாறு எடுத்துக் கொள்கிறது என்பதையும், அங்கீகரிக்கப்பட்ட வன்முறையின் ஒரு குறிப்பிட்ட அம்சம் எப்போது சட்டப்பூர்வமாக ஒரு குற்றமாக ஏற்கப்பட்டது என்பதையும் நாம் புரிந்துகொள்வதற்கான மேல் தரவுகளை (தரவுகளின் பின்னணிக் கதைகளை) அத்தியாயம் 4 ஆராய்கிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரையில் பெண்களும் சிறுமிகளும் சொத்துகளாகவே அதிகாரப்பூர்வமாக வகைப்படுத்தப்பட்டிருந்தனர், அதே வேளையில் ஆண்களும் சிறுவர்களும் குடிமக்களாக வகைப்படுத்தப்-பட்டிருந்தனர் என்ற உண்மை உள்ளிட்ட நுட்பமான விஷயங்களை

மேல்தரவுகள் வெளிப்படுத்துகின்றன. மாற்றுப்பாலினத்தவரினால் செய்யப்பட்ட குற்றங்கள் மற்றும் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை தொடர்பான தரவுகள் 2021ஆம் ஆண்டிலிருந்துதான் கிடைக்கின்றன. மாற்றுத்திறனாளிகள் அவர்களுடைய விகிதாச்சாரத்திற்கும் அதிகமாகக் குற்றங்களால் - குறிப்பாக பாலினம் மற்றும் பாலியல் சார்ந்த குற்றங்களால் – அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும்; ஆனால், அரசாங்கத்தின் மிக உயர்ந்த மட்டங்களுக்குப் பலமுறை பரிந்துரைத்த போதிலும், அந்தக் குற்றங்கள் பற்றிய தரவுகள் இன்னும் கிடைக்கவில்லை.

பதிவு செய்யப்பட்ட தரவுகள் நமக்கு இரண்டு விஷயங்களைச் சொல்கின்றன, வெளிப்படையான முதல் விஷயம் குற்றங்களின் அளவு. மிக முக்கியமாக, அரசு அமைப்புகளில் (உளவுத்திறன் மற்றும் நோக்கதில்) உள்ள கட்டமைப்பு சார்ந்த பாகுபாடுகளை எடுத்துக்காட்டுகிறது. 5, 6 அத்தியாயங்களில் உள்ள தரவுகளை ஆராய்கையில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் காட்டப்படுகின்றன, அவர்களுக்கு எதிரான குற்றங்கள் மறைக்கப்படுகின்றன அல்லது அற்பமானதாகச் சித்தரிக்கப்படுகின்றன என்ற நிலைமைகளிலிருந்து (அத்தியாயம் 5), பட்டியல் சமூகங்களை சேர்ந்த பெண்களும் சிறுமிகளும் கூடுதல் பாகுபாடுகளுக்கு உள்ளாகிறார்கள், அவமதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமைகள் வரை (அத்தியாயம் 6) சில சங்கடமான உண்மைகள் வெளிப்படுகின்றன - பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் பற்றிய தரவுகளுக்கு வரும்போது, சட்டச் செயலாக்கமும் நீதி நிர்வாகமும் குற்றத்தின் நீட்சியாகவே இருக்கின்றனவோ என்ற திகைப்பிற்கு நாம் உள்ளாகிறோம், அவைகள் சமூக அநீதியைத்தான் பிடிவாதமாக நிறைவேற்றுகின்றன என சந்தேகத்திற்கு இடமின்றிப் புரிந்து கொள்கிறோம். 70 ஆண்டு கால அதிகாரப்பூர்வ ஆவணங்களிலிருந்து இந்த முடிவுக்கு வருகிறோம் என்பது மேலும் மரத்துப் போகச் செய்கிறது.

கண்டறியப்பட்ட சில முக்கியமான உண்மைகள் (அத்தியாயம் 7) நன்கு அறியப்பட்டவைதான், சம்பவங்கள் சார்ந்து பேசப்பட்டவைதான், ஆனால்

இங்கே உள்ள ஆதாரங்கள் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களில் அப்பட்டமாக வெளிப்படுகின்றன - சம்பவங்கள் மறைக்கப்படுவது, அற்பமானமாகச் சித்தரிக்கப்படுவது, தரம் குறைந்த புலன்விசாரணைகள், பாகுபாடான நீதிமன்ற விசாரணைகள், திறமையற்ற அதிகாரிகள் ஆகிய நிலைமைகளுக்கான ஆதாரங்களை இந்தப் புள்ளிவிவரங்கள் தருகின்றன. தலைமுறை தாண்டிய தாமதங்கள், நீதிக்கான மாறுபட்ட அளவுகோல்கள், பாதிக்கப்பட்டு அதிர்ச்சியுடன் இருப்பவரை சோர்வடையச் செய்வதற்கென்றே வடிவமைக்கப்பட்ட நடைமுறைகள், பாதிக்கப்பட்டவரைக் கைவிடுவதற்கென்றே வடிவமைக்கப்பட்ட அமைப்புகள் ஆகியவை வெளிப்படையாகத் தெரிகின்றன, தரவுகளை ஆராயும்போது அந்த ஆதாரங்களைப் பார்க்காமல் இருப்பது அசாத்தியமாக இருக்கிறது.

சாதி, இனம், வயது, பாலினம் ஆகிய அடிப்படைகளில் - இவை ஒன்றையொன்று வலுப்படுத்துவதாக இருக்கின்றன - எங்கும் பரவலாக காணப்படுகிற வெவ்வேறு பிரிவுகளுக்குகிடையேயான பாகுபாடுகளை இவை மறுக்கமுடியாத ஆதாரங்களாக இருக்கின்றன. பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சீரழிவை ஏற்படுத்துகிற நிஜ உலக விளைவுகளுடன் சேர்ந்து சிந்தனைக்கு மேலும் பல விஷயங்களை புகட்டுகின்றன. காவல்துறையினரின் திறமையின்மையும் (15% வன்புணர்வு மற்றும் கொலை வழக்குகள், 7.5% வன்புணர்வு வழக்குகள், 63.5% சைபர் குற்றங்கள் ஆகியவை ‘உண்மை ஆனால் துப்பு கிடைக்கவில்லை’ என்று முடிக்கப்பட்டு இருக்கின்றன), நீதித்துறையின் திறமையின்மையும் (தனி சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டபோதிலும் வழக்குகள் தீர்க்கப்படுவது குறைந்துவருகிறது, தீர்க்கப்படுவதற்கான ஆண்டுகள் அதிகரித்து வருகிறது - IPC சட்டத்தின்கீழ் வரும் பெண்களுக்கெதிரான குற்ற வழக்குகள் தீர்க்கப்படுவதற்கு 13 ஆண்டுகள் ஆகின்றன, குடும்ப வன்முறை வழக்குகள் முடிவதற்கு 42 ஆண்டுகள் வரை கூட ஆகின்றன, நாடுகள் கடந்து சிறுமிகள் கடத்தப்படுவது தொடர்பான வழக்குகளுக்கு 100 ஆண்டுகள் ஆகின்றன) நன்கு தெரிந்தவைதான், ஆனாலும் அரசாங்க தரவுகளிலேயே அதற்கான சான்றுகள் கிடைப்பது மேலும் அதிர்ச்சியை தருவதாக இருக்கிறது.

சட்டச் செயலாக்கத்திலும் நீதி நிர்வாகத்திலும் நச்சுத்தனமான ஆண் (நான் உள்ளிருப்பவன், அப்பாவி) *எதிர்* பெண் (நீ வெளியாள், குற்றம் செய்திருக்கக்கூடியவள்) என்ற கண்ணோட்டம் இருப்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது. 5, 6, 7 ஆகிய அத்தியங்களில் உள்ள தரவுகள் இதை நிரூபிக்கின்றன, இந்த முக்கியமான அமைப்புகள் எப்படி ஆணாதிக்கக் கருத்தியலால் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதற்கு சாட்சியமாகின்றன.

தலைமை கணக்குத் தணிக்கையாளர் (CAG) போல சட்டச் செயலாக்கத்தைக் கண்காணிக்க ஒரு தணிக்கையாளர் நியமிக்கப்பட வேண்டும், மருத்துவமனை நிர்வாகம் போன்று சட்ட நிர்வாகமும் நீதி நிர்வாகமும் தனி ஒழுங்கமைப்புகளாக தொழில்முறையாக இருக்க வேண்டும், நீதிபதிகள் நியமனத்திற்கான கொலீஜியம் அமைப்பின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட, தீர்வுக்கான புதுமையான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவசர நிலைமைகளில், குறிப்பாக சட்டம் ஒழுங்கு சீர்குலைத்திருக்கும் நிலையில் செயல்படக்கூடிய ஒரு முக்கியமான உள்கட்டமைப்பாக நீதி நிர்வாகம் கருதப்பட வேண்டும் மற்றொரு முக்கியமான பரிந்துரையாகும். அடிப்படையான கட்டமைப்புக் கோட்பாட்டில் பொதிந்துள்ளபடி, அரசமைப்பு சாசனம் சார்ந்த ஒரு ஜனநாயகத்தில் சட்டத்தின் ஆட்சியே அடித்தளமாகும் என்ற கோணத்தில் இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதர பரிந்துரைகளில் பெரிய அளவுக்குப் புதிதாக எதுவும் இல்லை. 1953ஆம் ஆண்டின் ‘இந்தியாவில் குற்றங்கள்’ அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்டிருப்பது இதைத்தான் காட்டுகிறது. அந்தப் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை என்பது தற்போதைய செயலாக்க அமைப்புகள் (பாதிக்கப்பட்டவரை) கைவிடுவதற்கும், (குற்றவாளி) விடுவிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்கும், (சமுதாயத்தில்) பெண் வெறுப்பை மேலும் வளர்ப்பதற்கும் ஏற்ற முறையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. அதிகமான நீதிமன்றங்கள், அதிகமான நீதிபதிகள், போதுமான நிதி ஒதுக்கீடுகள், போதுமான உட்கட்டமைப்புகள், சட்டச் செயலாக்கத்திலும் (கீழே இருந்து மேலே வரையில்)

நீதி அமைப்பிலும் (வழக்குரைஞர்கள், நீதிபதிகள்) சிறந்த தரத்துடன் நியமிக்கப்படுவது, சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவது ஆகியவையெல்லாம் எழுத்துப்பூர்வமாக 70 ஆண்டுகளுக்கு முன் பரிந்துரைக்கப்பட்டன, அதன் பிறகு பலமுறை திரும்பவும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பின்வரும் அமைப்புகள் வாரியாக தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது: பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, துணை மண்டல அளவில் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள், பணவீக்க நிலைமைக்கு ஏற்ற நிவாரணம், பணவீக்க நிலைமைக்கு ஏற்ற மறுவாழ்வுப் பணிகள் (ஒட்டுமொத்த குடும்பத்தை உள்ளடக்கியதாக ஓய்வூதியங்கள், நிலையான அரசு பணி, பாதுகாப்பான இடத்தில் வீடு மற்றும் இடம், பட்டப்படிப்பு வரையில் இலவச உறைவிட கல்வி) - இவை 1989ஆம் ஆண்டின் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகள் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தில் கூறப்பட்டுள்ளன; வீடு தேடி வரும் நீதி - இது ஏற்கெனவே தமிழ்நாட்டிலும் கர்நாடகத்திலும் மாநில அரசுகளால் இதர திட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது, இதனை லோக் அதாலத் மற்றும் இதர சட்ட சேவைத் திட்டங்களோடு ஆக்கபூர்வமாக இணைத்து விரிவுபடுத்த முடியும்.

முடிக்கப்படாத பணிகள் (அத்தியாயம் 9) என்று வருகிறபோது இந்தியாவில் வன்புணர்வு குற்றவாளி பாதிக்கப்பட்ட பெண்களை வன்புணர்வுக்கு முன்பு அல்லது பிறகோ திருமணம் செய்து கொண்டால் வன்புணர்வு ஒரு குற்றமாகாது என்ற ஆன்மாவையே கொல்லும் உண்மை முன்னால் வந்து நிற்கிறது. நீதிபதிகள் 'ஸ்டாக்ஹோம் சிண்ட்ரோம்' எனப்படும், கடத்தப்பட்டவர்கள் கடத்தியவர்களையே ஏற்றுக்கொள்ளும் நிலைமை பற்றி நீதிபதிகள் அறிந்திருக்கவேண்டும். 'சம்பந்தப்பட்டவர்கள் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் அவர்களுக்கு குழந்தைகள் இருக்கின்றன' - என்று கூறி திருமணத்திற்காக கடத்திச் சென்றவர்களை விடுதலை செய்வதற்கு முன் இதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெண்களை ஆயுட்காலம் முழுவதும் பாலியல் அடிமைகளாக

மாற்றும் திட்டமிட்ட மனித கடத்தலுக்காகத் தான் இந்த 'திருமணங்கள்' நடைபெறுகின்றன என்பதை நீதிபதிகள் புரிந்திருக்க வேண்டும்.

முடிவாக இறுதி அத்தியாயத்தில் சமீபத்திய நிகழ்ச்சிப் போக்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் பல சம்பவங்கள் அதே பழைய இருண்ட வடிவத்தின் தொடர்ச்சியாக இருக்கின்றன, சில சம்பவங்கள் கெட்ட அறிகுறிகளாக இருக்கின்றன. எல்லாமே பறிபோய்விடவில்லை என்றாலும், வெளிச்சமான சில பகுதிகளும் பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்றாலும், நமக்கு நாமே அரசமைப்பு சாசனத்தை வழங்கிக் கொண்டபோது கனவு கண்ட சுதந்திரத்தின் சொர்க்கத்தில், இந்திய மக்களாகிய நாம் உறங்குவதற்கோ, விழிப்பதற்கோ பல மைல் தூரம் சென்றாக வேண்டியிருக்கிறது.

**1.2 கண்டறிந்தவை**

**1.2.1 மேல்தரவு விவரங்கள்**

- இந்தியாவில் குற்றங்கள் தொடர்பாக 1953ல் வெளியிடப்பட்ட முதல் அறிக்கையிலேயே தேசிய அளவில் கால்நடை திருட்டுகள் பதிவாகிவந்துள்ளன, அதேபோல் வன்புணர்வு சம்பவங்களை பதிவு செய்ய 1971 வரையில் காத்திருக்க வேண்டியதாயிற்று.
- வன்புணர்வு குற்றத்திற்காக பிடிப்படிப்பட்ட சிறார்களின் பாலின அடிப்படையிலான தரவுகள் 1958ஆம் ஆண்டிலேயே பதிவாக தொடங்கின, ஆனால் அந்த வன்புணர்வு குற்றத்தில் பாதிக்கப்படும் குழந்தைகள் பற்றி பதிவு செய்வதற்கு 2017 வரையில் தாமதம் ஆனது.
- 2000 வரையில் பெண்களும் சிறுமிகளும் கடத்தப்படுவது சொத்து தொடர்பான குற்றமாகவே கருதப்பட்டது, ஆனால் ஆண்களும் சிறுவர்களும் கடத்தப்படுவது வாழ்வுரிமைக்கு எதிரான குற்றமாக கருதப்பட்டது.
- 1961 ஆம் ஆண்டிலேயே வரதட்சணை தடைச் சட்டம் வந்துவிட்டது, ஆனால் அது தொடர்பான தரவுகள் 1988 ஆம் ஆண்டில் தான் - 27 ஆண்டுகளுக்குப் பிறகுதான் - வெளியிடப்பட்டன.
- 1992 ஆம் ஆண்டிலிருந்துதான் 'இந்தியாவில் குற்றங்கள்' அறிக்கைகளில் 'பெண்களுக்கு எதிரான குற்றங்கள்' ஒரு தனி அத்தியாயமாக வெளியிடப்பட்டு வருகிறது.

- 2016 ஆம் ஆண்டிலிருந்து போலீஸ் காவலில் நடைபெறும் வன்புணர்வு குற்றங்கள் பற்றிய வகைப்படுத்தப்பட்ட தரவுகள் தவிர்க்கப்பட்டு வந்துள்ளன.
- 2013 ஆம் ஆண்டின் நிர்பையா சம்பவத்திற்குப் பிறகு வன்புணர்வு சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதில் 35% அதிகரித்தது, இதேபோல் கொல்கத்தா அதிர்ச்சி சம்பவத்தின் காரணமாக 2024, 2025 ஆகிய ஆண்டுகளிலும் இந்த பதிவுகள் அதிகரித்துள்ளன.
- இந்தியாவில் வன்புணர்வு குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணை குற்றவாளி குற்றத்திற்கு முன்பு அல்லது பின்பு திருமணம் செய்து கொண்டால் அந்த வன்புணர்வு குற்றம் சட்டபூர்வமானதாகிவிடும். 2017 அக்டோபர் 11 வரையில் சிறுமிகளை வன்புணர்வுக்கு உட்படுத்துவது நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு வந்துள்ளது.

### 1.2.2 தரவுகளின் போக்கு

- CII அறிக்கையில் முதன்முதலாக வன்புணர்வு குற்றம் பதிவு செய்யப்பட்டபோது 547,949,809 ஆக இருந்த இந்திய மக்கள் தொகை (மக்கள் தொகை கணக்கெடுப்பு, 1971) 2022 ஆம் ஆண்டில் 1,379,750,000 ஆக அதிகரித்துவிட்டது - அதாவது 2.5 மடங்கு. இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வன்புணர்வு குற்றங்கள் 13 மடங்கு அதிகரித்துள்ளன.
- பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான மேலும் சில வன்முறை வடிவங்கள் குற்றங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்ற போதிலும், பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கைக்கும் பதிவு செய்யப்பட்ட வன்புணர்வு எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது, குறைவாகவே இந்த குற்றம் பதிவு செய்யப்படுகிறது என்ற கடுமையான நிலைமையை தான் இது சுட்டிக்காட்டுகிறது.

- பெண்களுக்கு எதிரான (வன்புணர்வு, வன்புணர்வு முயற்சி, பெண்களின் கண்ணியத்தை சீர்குலைக்கும் வகையில் தாக்குதல், பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு) குற்றங்களின் மொத்த எண்ணிக்கையில் வன்புணர்வு குற்றங்களின் சதவீதம் ஏழு ஆண்டுகளில் 50% அதிகரித்தது - 2015 ஆம் ஆண்டில் 10.55%, 2022 ஆம்

ஆண்டில் 15.5% - பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்க, அவற்றைப் பற்றிய பதிவுகள் குறைந்து கொண்டிருக்கின்றன என்பதை இது தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

- 2022 ஆம் ஆண்டில் 69,027 வன்புணர்வு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆனால், வன்புணர்வு முயற்சி தொடர்பான பதிவுகளின் விகிதம் (2014 ஆம் ஆண்டு முதல் கிடைக்கின்ற தரவுகளின் படி) 2014 முதல் 2018 வரையில் மிகக் குறைவாக 0.1% ஆக பிடிவாதமாக குறைந்த விகிதத்தில் இருந்து வந்திருக்கிறது. 2022 ஆம் ஆண்டில் இது நம்ப முடியாத அளவிற்கு 0.05% ஆக சரிவடைந்தது.
- அமர்வு நீதிமன்றங்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக 1,10,000க்கு மேற்பட்ட வன்புணர்வு வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன.
- 2021, 2022 ஆண்டுகளில் பெண்களை விட அதிகமான எண்ணிக்கையில் 18 வயதிற்கு குறைந்த சிறுமிகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பதிவுகள் இருக்கின்றன.
- 2022ஆம் ஆண்டில் மட்டுமே திருமணத்திற்கு கட்டாயப்படுத்துவதற்காக 28,847 பெண்களும், 13,981 சிறுமிகளும் கடத்தப்பட்டதாக பதிவாகியுள்ளது - ஆயுட்கால பாலியல் அடிமைத்தனத்திற்காக கடத்தப்படுவது கலாச்சார ரீதியாகவே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.
- ஒட்டு மொத்த எண்ணிக்கைகளிலும், ஒப்பீட்டளவுகளிலும் பாதிக்கப்படுபவர்களின் வயது குறைகிறது, அதிகரிக்கவும் செய்கிறது. குழந்தைகள் மீதான பாலியல் மோகம் அதிகரித்து வருவதை வகைப்படுத்தப்பட்ட தரவுகள் காட்டுகின்றன. 1971 முதல் 2017 வரையிலான பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில், 18-30 வயதுப் பிரிவினர் இதற்கு இரையாகக் கூடியவர்களாக பெருமளவிற்கு இருந்திருக்கிறார்கள். 2018 முதல் இந்த வயதுப் பிரிவைப் பின்னுக்குத் தள்ளி 12-18 வயதுப் பிரிவினர் பெருமளவிற்கு இரையாக கூடியவர்களாக இருந்து வருகிறார்கள்.
- குழந்தைகளுக்கு எதிரான வன்புணர்வுக் குற்றங்களின் பதிவுகள் வகைதொகையின்றி அதிகரித்து வருகின்றன, பெருந்தொற்றுக் காலத்தில் கூட இதே நிலைமைதான் இருந்தது. 2020ஆம் ஆண்டில் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையை விட

சிறுமிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது, அதன் பிறகு தொடர்ந்து அதிகமாகவே இருந்து வருகிறது. பெருந்தொற்றுக் காலமான 2020ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் குறைந்தன என்றாலும், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது - பாதிக்கப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்ததே இதற்குக் காரணம்.

- பெருந்தொற்று ஆண்டில் வன்புணர்வு குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது - 18-30 வயது வரையிலான பெண்கள் 54% வரை, 30-45 வயது வரையிலான பெண்கள் 60% வரை, 45-60 வயது வரையிலான பெண்கள் 113% வரை, 60 வயதிற்கும் மேற்பட்ட பெண்கள் 40% வரை என கைது விகிதம் அதிகரித்தது. இது அசாதாரணமான நிகழ்வா அல்லது கற்புக்கரசி-கற்பிழந்தவள் கருத்தின் வேறுபாட்டின் வெளிப்பாடா என்பது ஆராயப்பட வேண்டும்.
- பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வன்புணர்வுக் குற்றத்திற்கும் கைது செய்யப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 1.22 ஆக தொடர்ச்சியாக நிலையாக இருந்து வந்திருக்கிறது, 2014ஆம் ஆண்டில் இது 1.31 ஆகவும், 2017ஆம் ஆண்டில் 1.33 ஆகவும் உச்சத்திற்குப் போனது. மிகக் குறைவாகப் பதிவானது 2019ஆம் ஆண்டில்தான் – 1.13. அதன் பிறகு கவலையளிக்கும் வகையில் இது நீண்ட கால சராசரியை விட குறைவாக இருந்து வருகிறது. 2007 முதல் 2011 வரையில் வன்புணர்வுக்காகக் கைது செய்யப்பட்டவர்களின் நீண்ட கால சராசரி வீழ்ச்சியடைந்தது, அத்தோடு அது முடிந்துவிடவில்லை.
- தீ விபத்துகளில் மட்டுமே பதிவு செய்யப்பட்ட பெண்களின் எண்ணிக்கை (67%) ஆண்களின் எண்ணிக்கையை விட (33%) அதிகமாக இருக்கிறது, அநேகமாக இதற்கு 'ஸ்டவ் வெடிப்புகள்' காரணமாக இருக்கக்கூடும்.
- பதிவுகள் முதல் காவல்துறை புலன் விசாரணை, நீதிமன்ற விசாரணை மூலமாக தண்டனை அளிக்கப்பட்ட நபர்கள் வரையிலான விவரங்கள் உள்ள ஒரே குற்றமாகிய *பெண்களும் சிறுமிகளும் சைபர் வழி பின்தொடரப்படுதல்/தொந்தரவு செய்யப்படுதல்* தொடர்பான

குற்றங்களில் - காவல்துறையினரால் 1.155 வழக்குகள் முடிக்கப்பட்டன, 241 வழக்குகள் (21%) ‘உண்மை ஆனால் துப்பு கிடைக்கவில்லை’ என முடிக்கப்பட்டன. காவல்துறை திறமையின்மையின் அதிர்ச்சியூட்டும் அளவு இது.

**1.2.3 பட்டியல் சமூகங்கள், அமைப்பு சார்ந்த பாகுபாடுகள்**

சமூகங்களுக்கு இடையிலான குற்றங்கள் குறித்துப் பார்க்கும்போது, பட்டியல் சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் எதிரான பாகுபாடுகள் பளிச்சென்று தெரிகின்றன -

- 2019 முதல் பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த பெண்கள் அல்லது சிறுமிகளுக்கு எதிரான வன்புணர்வு முயற்சி தொடர்பான சமூகங்களுக்கு இடையேயான குற்றச் சம்பவங்களில் ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை.
- சமூகங்களுக்கு இடையேயான வன்புணர்வுக் குற்றங்கள் பதிவு, அதன் விகிதம், மைனர் சிறுமிகளின் சதவீதம் ஆகியவை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. சில மாநிலங்களில் மைனர் சிறுமிகளுக்கு எதிரான சமூகங்களுக்கு இடையேயான வன்புணர்வுக் குற்றங்கள் சமவிகிதத்தில் இல்லை. குறிப்பிட்ட மாநிலங்களில் சாதி மற்றும் இன மோதல்களில் வன்புணர்வு ஒரு கருவியாக, சிறுமிகள் இலக்கு வைக்கப்படுவது ஒரு குறிப்பான ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை இது எடுத்துக்காட்டுவதாக இருக்கக்கூடும்.
- இந்தியாவில் சமூகங்களுக்கு இடையேயான குற்றச்செயல்களில், பட்டியல் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த பெண்களும் சிறுமிகளும் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுவதுதான் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளது. 2022ஆம் ஆண்டில் 19 மாநிலங்களில் குறைந்தது ஒரு வழக்கு பதிவானது, அவற்றில் 14 மாநிலங்களில் வன்புணர்வுதான் மிக அதிகமாகப் பதிவானது. வன்புணர்வு முயற்சி அரிதாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது, பதிவு செய்யப்பட்ட வன்புணர்வு வழக்குகளில் இது 1% மட்டுமேயாகும். வன்புணர்வுக் குற்றங்கள் குறித்து அறிக்கையளித்துள்ள 19 மாநிலங்கள் மற்றும்

ஒன்றிய பிரதேசங்களில் 13 மாநிலங்கள்/ஒன்றிய பிரதேசங்கள் (68%) வன்புணர்வு முயற்சி தொடர்பாக ஒரு வழக்கு கூட பதிவு செய்யவில்லை..

- பட்டியல் சாதியினருக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக குற்றப்பத்திரிக்கை பதிவு செய்யப்படுவது மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துவிட்டது. 2017ஆம் ஆண்டில் 78%ஆக இருந்தது 2022ஆம் ஆண்டில் 52%ஆக சரிவடைந்தது. இதனிடையே, தண்டிக்கப்பட்ட விகிதம் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைவாக, தேசிய சராசரியை விட பாதிக்கும் குறைவாக இருந்து வருகிறது, 2022ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தரவுகளில் இது நான்கில் ஒரு பகுதி (19%ல் 4.3%) மட்டுமேயாகும்.
- 2017 முதல் 2022 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் சிறுமிகள் மீதான தாக்குதல் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் ஒட்டு மொத்தத்தில் நிலுவையில் இருப்பது 50% அதிகரித்துள்ள நிலையில், பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த சிறுமிகளைப் பொறுத்தவரையில் அந்த நிலுவை விகிதம் 370% அதிகரித்திருக்கிறது, பட்டியல் சாதிகளைச் சேர்ந்த சிறுமிகளை பொறுத்தவரையில் 450% அதிகரித்திருக்கிறது.
- 2022ஆம் ஆண்டில் வழக்குகள் தீர்க்கப்பட்ட விகிதத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோது, பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு தொடர்பான வழக்குகள் முடிவதற்கு 10 ஆண்டுகளாகும், அவற்றில் குற்றவாளி என தண்டனை அளிக்கப்படுவதற்கான வாய்ப்பு 18.5% ஆக இருக்கும்; பட்டியல் சாதிகளைச் சேர்ந்த பெண்களைப் பொறுத்தவரையில் அந்த வழக்குகள் முடிவதற்கு 8 ஆண்டுகளாகும், தண்டிக்கப்படும் வாய்ப்பு 4.8% ஆக இருக்கும்; பட்டியல் பழங்குடிகளைச் சேர்ந்த பெண்களின் விஷயத்தில் 44 ஆண்டுகளாகும், தண்டனை வாய்ப்பு 0% ஆகத்தான் இருக்கும்.

### 1.2.4 நீதியை நசுக்கும் நீதிமன்றங்கள்

- எந்த ஒரு ஆண்டிலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையில் நீதிமன்றங்களால் வழக்குகள் தீர்க்கப்படுவது அரிதாகவே

நடந்திருக்கிறது. காவல் துறையினர் அண்மைக்கால போக்கிற்கேற்ப குறைவான வழக்குகளை தக்கல் செய்தால் கூட இதுதான் நிலைமை.

- சொல்லப்போனால் நீதிமன்றங்கள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இறந்து போகும் வரையில் காத்திருக்கின்றனர் அல்லது அவர்களது வயது முதிர்ச்சியை காரணம் காட்டி விடுவித்து விடுகின்றனர் போலவே தெரிகிறது.
- 2019ஆம் ஆண்டின் விரைவு சிறப்பு நீதிமன்றங்களும், தனி சிறப்பு POCSO நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. ஓராண்டில் 165 வழக்குகளை அவை தீர்த்து வைக்க வேண்டும். ஒவ்வொரு 1.6 வேலை நாட்களுக்கும் ஒரு வழக்கு வீதம் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் சிறுமிகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட வழக்குகளின் விகிதம் 30% ஆக இருந்தது, பெண்கள் தொடர்பான வழக்குகளில் அந்த விகிதம் 28.5% ஆக இருந்தது. வன்புணர்வு மற்றும் கொலை வழக்குகளில் அது 67%, இதில் நிலுவை விகிதமோ 95% ஆக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (18,517), 2016ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைக்கு (18,099); இடைக்காலத்தில் 750 விரைவு சிறப்பு நீதிமன்றங்களும் (FTSC), 408 தனி POCSO நீதிமன்றங்களும் அமைக்கப்பட்ட போதிலும் இதுதான் நிலைமை.
- FTSC நீதிமன்றங்கள் பெண்களின் வழக்குகளுக்கு தான் முன்னுரிமை அளித்துள்ளன, தனி POCSO நீதிமன்றங்கள் இருக்கின்ற போதிலும் சிறுமிகள் கைவிடப்பட்டவர்கள் ஆகிறார்கள். தீர்க்கப்பட்ட சிறுமிகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை சரிவடைந்து போயிருக்கிறது. சிறுமிகள் தொடர்பான வழக்குகள் தீர்க்கப்படுவது என்பது FTSC நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கு முந்தைய நிலவரத்தில் பாதி அளவுக்கே இருக்கிறது - 2018இல் 4,683, 2020இல் 1,949, 2021ல் 2,305, 2022இல் 1,975.

2022ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிராக செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பான வழக்குகள் தீர்க்கப்பட்ட விகிதத்தில் நீதிமன்றங்களுக்கு பின்வரும் கால அவகாசங்கள் தேவைப்படும்:

- 12 ஆண்டுகள் – 2023 ஜனவரி 01ஆம் தேதிக்கு முன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு தேங்கியிருக்கும் வழக்குகளை, அடுத்தடுத்து பதிவான வேறு எந்த வழக்கையும் எடுத்துக் கொள்ளாமலே, முடிப்பதற்கு.
- 8 ஆண்டுகள் (வழக்குகள் தீர்க்கப்படுவதில் மிகக் குறைந்த காலம்) – 2012ஆம் ஆண்டின் POCSO சட்டம் 4, 6 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட (நிலுவையிலுள்ள 233,445) வழக்குகளை முடிப்பதற்கு. POCSO சட்டத்தின் இதர பிரிவுகளில் பதிவாகியுள்ள வழக்குகளை தீர்க்க 32 ஆண்டுகள்.
- 8 ஆண்டுகள் - பட்டியல் சாதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளில், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் *பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு* வழக்குகளை முடிப்பதற்கு. ஆனால் தண்டனை விகிதம் 4.3% ஆகவே இருக்கும்.
- 9 ஆண்டுகள் - *வன்புணர்வு* வழக்குகளை(178,485) முடிப்பதற்கு. ஆனால் *வன்புணர்வு மற்றும் கொலை* வழக்குகளை முடிப்பதற்கு 20 ஆண்டுகள்.
- 12 ஆண்டுகள் - *கணவனின் கொடுமைகள்* தொடர்பான வழக்குகளை (786,675) முடிப்பதற்கு, நிலுவையிலுள்ள வழக்குகளில் இதுவே மிக அதிகம்.
- 15 ஆண்டுகள் - *வரதட்சணை மரணங்கள்/சாவு* வழக்குகளை (56,859) முடிப்பதற்கு, இந்த வழக்குகளில் சந்தேகத்திற்கு உரியவர்களென மிக குறைவானவர்களே இருப்பார்கள்.
- 20 ஆண்டுகள் - *அமில வீச்சு* வழக்குகளை முடிப்பதற்கு.
- 21 ஆண்டுகள் - *திருமணத்திற்காக பெண்கள் கடத்தப்படுதல்* மற்றும் *பலவந்தமாக கடத்தப்படுதல்* வழக்குகளை (123,808) முடிப்பதற்கு; 23 ஆண்டுகள் - சிறுமிகள் கடத்தப்பட்ட வழக்குகளை (51,646) முடிப்பதற்கு, 53 ஆண்டுகள் - *கொலை செய்வதற்கு கடத்தல்* மற்றும் *பலவந்த கடத்தல்*

வழக்குகளை முடிப்பதற்கு - அதற்குள் அவர்களுக்கு பேரன் பேத்திகள் பிறந்து விடுவார்கள்.

- 39 ஆண்டுகள் - பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக செய்யப்பட்ட *சைபர் குற்றங்கள்* தொடர்பான வழக்குகளை முடிப்பதற்கு.
- 49 ஆண்டுகள் - *குடும்ப வன்முறையிலிருந்து பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டம்* தொடர்பான வழக்குகளை முடிப்பதற்கு - 18% தண்டனை விகிதத்துடன் - 'பாதுகாப்பு' என்பதன் அர்த்தமே மறுவரையறை செய்யப்படுகிறது, நீதி கிடைப்பதற்கு முன் மரணம் உத்தரவாதப்படுத்தப்படுகிறது.
- 100 ஆண்டுகள் - *வெளிநாடுகளிலிருந்து சிறுமிகள் இறக்குமதி செய்யப்பட்ட* வழக்குகள் மற்றும் *விலைக்கு வாங்கப்பட்ட* வழக்குகளை முடிப்பதற்கு. சிறுமிகளை விலைக்கு விற்பது கூடுதல் தீவிரத்துடன் எடுத்துக் கொள்ளப்படுவதால் அந்த வழக்குகளைத் தீர்ப்பதற்கு வெறும் 95 ஆண்டுகள்தான் ஆகும்.
- *வெளிநாடுகளிலிருந்து சிறுமிகள் இறக்குமதி செய்யப்பட்ட* வழக்குகளில் 2017ஆம் ஆண்டிலிருந்து பத்தில் ஒன்று மட்டுமே தண்டனையில் முடிவடைந்துள்ளது, மேலும் 2019 முதல் 2022 வரை ஒரு வழக்கு கூட தீர்க்கப்படவில்லை.

காவல்துறையினரும் நீதிபதிகளும் நகர்ப்புறங்களில் நடக்கும் சில குற்றங்களைத்தான் கையாள்வதற்கான தயாரிப்புகளோடு இருக்கிறார்கள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்களைக் கையாள்வதற்கு அல்ல:

- *ஆயத்தீர்வை சட்டம்* (குற்றப்பத்திரிகை 99.5%, தண்டனை விகிதம் 90.0%).
- *மோட்டார் வாகன சட்டம்* (98.5%, 92.7%)
- *போதை மருந்துகள் மற்றும் மனநோய் பொருட்கள் சட்டம், 1985* (99.9%, 83.1%).

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளைப் பொறுத்தவரை:

- *கொலை* (குற்றப்பத்திரிகை 81.5%, தண்டனை விகிதம் 43.8%).
- *வன்புணர்வு* (77.9%, 27.4%).

- *கடத்தல் மற்றும் பலவந்தக் கடத்தல்* (36.4%, 33.9%).
- *காயம்* (*அமில வீச்சு* உட்பட) (89.9%, 35.9%).
- *கலவரம்* (86.6%, 24.9%).
- பெருநகரங்களில் வன்புணர்வுக்கான தண்டனை விகிதம் 17.9%.

**1.3 பரிந்துரைகள்**

**1.3.1 காவல்துறை**

- வன்முறைகளுக்கும் குற்றங்களுக்கும் சாதகமாக அமையும் சூழல்களை வலுவிழக்கச் செய்வதையும், சாத்தியமான இடங்களில் ஒழித்துக் கட்டுவதையும் உள்ளடக்கிய செயலாக்கத்தை வகுக்க வேண்டும். எதிர்வினையாற்றும் காவல் முறையிலிருந்து விலகி, குற்றவியல் சூழல்களைத் தகர்க்கும் முறைக்கு மாற வேண்டும்; அதற்காக, தகவல் அளிப்போரையும், மூன்றாந்தர வழிமுறைகளையும் சார்ந்திருப்பதற்கு மாறாக நுண்ணறிவு சார்ந்த வழிமுறைகளையும், தடயவியல் அடிப்படையிலான புலனாய்வு முறைகளையும் பயன்படுத்த வேண்டும்.
- காவல் படையில் குறைந்தது 50% பெண்கள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும், 33% இட ஒதுக்கீட்டைக் கறாராகச் செயல்படுத்த வேண்டும், அனைத்துப் பதவி நிலைகளில் இருப்பவர்களுக்கும் பாலினப் புரிதல்களுக்கான பயிற்சிகளைக் கட்டாயமாக்க வேண்டும்.
- குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதை அதிகரிப்பதற்கும், விடுவிக்கப்படுவதைக் குறைப்பதற்கும் தடயவியல் உள்கட்டமைப்புகளைத் தரமுயர்த்த வேண்டும், காவல் நிலையங்களில் அத்தியாவசியமான புலனாய்வுக் கருவிகள் இருக்க வேண்டும், தொடர்ச்சியான புதுப்பிப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.
- அதிகாரிகளுக்கு சைபர் குற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த குற்றங்கள் தொடர்பாகப் பயிற்சி அளிக்க வேண்டும், 'உண்மை ஆனால் துப்பு கிடைக்கவில்லை' என தள்ளப்படும் விகிதம் (63.5%) அதிகமாக இருப்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும், அரசியல் கண்காணிப்பு வேலைகளிலிருந்து இணைய வழியில் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாக்கும் வேலைகளுக்குத் திருப்பிவிட வேண்டும்.

- சுயேச்சையான கண்காணிப்பு ஏற்பாடுகளை நிறுவ வேண்டும், ‘அக்கறைக்குரிய நபர்களாக’ குடிமக்கள் மாறுகிறபோது அவர்களுக்கு உரிய தகவல்கள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும், காவல் வன்முறைகள், காவல் கொடுமைகள் ஆகியவற்றுக்கு எதிரான பாதுகாப்புகளை உறுதிப்படுத்த வேண்டும்.
- ஊரகம் சார்ந்த சட்டங்கள் செயல்படுத்தப்படுவதை வலுப்படுத்த வேண்டும், சாட்சிகளின் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும், சமூகக் காவலை மீட்டமைக்க வேண்டும், செயல் திறனோடு வழக்குகள் தீர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- வழக்குகள் குவிவதைக் குறைக்க வேண்டும், ‘குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் நிரபராதியே’ என்ற கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்க வேண்டும், விசாரணைக் கைதிகள் விசாரணைக்கு முன்பே சிறையில் அடைக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும், அதற்காக நம்பகமான நீதி சார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- காவல் பணி நியமனங்களின் தரத்தை உயர்த்த வேண்டும், காவலர்கள் பற்றாக்குறைப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும், வழக்கமான குற்றங்கள், புதிய குற்றங்கள் இரண்டையுமே கையாளத்தக்க வகையில் காவல் படையினரின் திறமைகளை மேம்படுத்த நிறுவனம் சார்ந்த தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இந்தியாவில் குற்றங்கள் பற்றிய வருடாந்திர அறிக்கையில் பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றவாளியின் இயலாமை நிலை குறித்த தகவல்களைச் சேகரித்து வெளியிட வேண்டும் (அதனை FIR வடிவத்திலும் CII தரவு சேகரிப்பு வடிவத்திலுல் சேர்க்க வேண்டும்).

### 1.3.2 நீதித்துறை

- பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தையும் மறுவாழ்வையும் உள்ளடக்கியதாக நீதியமைப்பை மறுவரையறை செய்ய வேண்டும். குற்றம் இழைப்போர் திருந்துவதற்கான மிக விரைவான, உறுதியான, கறாரான நடைமுறைகளைக் கொண்டு வர வேண்டும், இரு தரப்பு குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சமுதாயத்திற்கு ஆறுதலளிக்கும் நீதிமுறையை உறுதிப்படுத்த வேண்டும்.

- ஸ்டாக்ஹோம் சிண்ட்ரோம், கற்புக்கரசி-கற்பிழந்தவள் என்ற கருத்தியல் சமூக முத்திரையின் வேதனைகள் ஆகியவை தொடர்பாக நீதி நிர்வாக அலுவலர்கள் அனைவருக்கும் பயிற்றுவிக்க வேண்டும்.
- தீர்ப்புகளும் சட்டங்களும் செயல்படுத்தப்படும் நிலைகளைக் கண்காணிப்பதற்காக CAG போன்ற தலைமை சட்டச் செயல்பாடு தணிக்கையாளர் (LPAG) என்ற பதவியை சட்டப்பூர்வமாக உருவாக்க வேண்டும். அவர் சிறப்பு நீதிமன்றங்கள், தனி சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் செயல்பாடுகள் குறித்து ஒன்றுக்கொன்று உள்ள தொடர்புகளோடு தணிக்கை செய்ய வேண்டும்.
- சட்டம் மற்றும் நீதி நிர்வாகம் என்பது ஒரு தனித்துவமான ஒழுங்கமைப்பு, பணிமுறை என அங்கீகரிக்க வேண்டும். நீதி நிர்வாகப் பணி (JAS) என்ற பதவி சார் கல்வி நிலையை உருவாக்கி நியமிக்க வேண்டும்.
- அவசர நிலமைகளின் போது, குறிப்பாக சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கும் நிலையில், செயல்படக்கூடிய முக்கியமான உள்கட்டமைப்பாக நீதி நிர்வாகத்தைக் கருத வேண்டும்; ஏனெனில் அரசமைப்பு சாசனம் சார்ந்த ஜனநாயகத்தின் அடித்தளம் சட்டத்தின் ஆட்சிதான்.
- கூடுதல் நீதிமன்றங்கள், கூடுதல் நீதிபதிகள், போதிய நிதி ஒதுக்கீடுகள், போதிய உள்கட்டுமானம், சட்டச் செயலாக்கப் பணி நியமனங்களில் (கீழிருந்து மேலே வரையில்) சிறந்த தரம், நீதித்துறை (வழக்குரைஞர்கள் மற்றும் நீதிபதிகள்) நியமனங்களில் சிறந்த தரம், சமூகத்துடன் இணைந்த செயல்பாடு ஆகிய அனைத்தும் 70 ஆண்டுகளுக்கு முன்பே பரிந்துரைக்கப்பட்டன அதன் பிறகு பலமுறை திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்த வேண்டும். நடப்பு ஆண்டில் (அல்லது மூன்றாண்டு சராசரியில்) நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையை, தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலமாகவும், சட்டப்பூர்வமான கால அளவுக்கு உட்படுத்தியும் தேவைப்படும் நீதிமன்றங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியும்.

### 1.3.3 ஒரு ஒட்டுமொத்த சமுதாய அணுகுமுறை

- கல்வியின் மூலமாகவும் ஈடுபடுத்துதல்களின் மூலமாகவும் சமூக மாண்புகள் பற்றிய நச்சுத்தனமான போக்குகள் குறித்த புரிதல்களை ஏற்படுத்த வேண்டும், பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு, குறிப்பாக சிறுவர்களுக்கு, சுய பெருமிதம், மரியாதை பற்றிய தீங்கான நம்பிக்கைகளைக் கேள்விக்கு உட்படுத்த வேண்டும்.
- ஆண்மை குறித்த மிகையான கற்பிதங்கள், சன்டைக் குணம், உடைமை உணர்வு ஆகியவற்றை எதிர்க்க வேண்டும்; அமில வீச்சு, கடத்தல் போன்ற குற்றங்கள் குறித்த புரிதல்களை ஏற்படுத்த வேண்டும், கொள்கையை உருவாக்குவதிலும் செயல்படுத்துவதிலும் ஆய்வுத் தரவுகளைப் பயன்படுத்த வேண்டும்.
- அரசு - குடிமைச் சமூக ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும், பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் முன்னனுமானத்துடன் காவல் பணியை மேற்கொள்வதற்காகவும் ஒத்துழைப்புடன் கூடிய பிரச்சினைத் தீர்வுக்காகவும் குற்றத் தரவுகள் வெளிப்படையாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- தொழில் நேர்த்தியுடன் கூடிய காவல் முறைக்கு மாற வேண்டும், அதில் குடிமைச் சமூகத்துடனான ஒத்துழைப்பு மனப்பான்மை இருக்க வேண்டும், பாதுகாப்பு என்பது ஒரு கூட்டுப் பொறுப்பு என அங்கீகரிக்க வேண்டும்.
- சட்டச் செயலாக்கம், நீதித்துறை ஆகியவற்றிற்கான வள ஒதுக்கீடுகளில் நீதிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், தகவல் உரிமை, சாட்சிகளுக்குப் பாதுகாப்பு போன்ற சட்டப்பூர்வ ஏற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டும்.
- நீதி பெறுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் செயலூக்கமுள்ள குடிமக்களைப் பாதுகாக்க வேண்டும், துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும், பயனுள்ள பணிகளுக்காக குடிமைச் சமூக அமைப்புகளுடன் கூட்டுச் செயல்பாடுகளை வளர்க்க வேண்டும்.
- ‘இந்தியாவின் நீதி அறிக்கை’ போன்ற குடிமைச் சமூக முயற்சிகளை ஆதரிக்க வேண்டும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும்,

சங்கடமான சமூக உண்மைகளைக் கையாளுவதற்காகவும் தற்போதுள்ள வளங்களை உரிய விகிதத்தில் பயன்படுத்த வேண்டும்.

### 1.4 முன்னுள்ள பாதை

- *மந்தப் போக்கிலிருந்து செயல்படும் நிலைக்கு மாறுதல்:* நீதித்துறை உட்பட அரசுக் கட்டமைப்பிற்கு உள்ளே இருந்தே போதுமான பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன, நிபுணத்துவம் வாய்ந்த பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், பாலின அடிப்படையிலான வன்முறைகளைக் கையாளுவதில் உள்ள அமைப்பு சார்ந்த மந்தப் போக்கை கைவிட வேண்டும்.
- *அரசியல் மற்றும் நிறுவனம் சார்ந்த எதிர்ப்புகளை சமாளித்தல்:* அவசர கதியிலான அலங்கார எதிர்வினைகளைப் பின்னுக்குத் தள்ளி, மெய்யான சீர்திருத்தங்கள் முன்னுக்கு வருவதை உறுதிப்படுத்த வேண்டும், அதற்காக தற்போதைய அமைப்பு முறைகளிலிருந்து ஆதாயம் அடைபவர்களிடமிருந்து வரக்கூடிய எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டும்.
- *செயலூக்கமுள்ள தலையீடுகளுக்காக தரவுகளைப் பயன்படுத்துதல்:* குற்றங்களைத் தடுப்பதில் தகவல் ஞானத்துடன் கூடிய தலையீடுகளை உறுதிப்படுத்தும் வகையில், பெண்களுக்கும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கும் எதிரான வன்முறைகளை முன்கூட்டியே எதிர்கொள்வதற்காக, குற்றங்களுக்கு சாதகமான சூழல் அமைப்புகளை தகர்ப்பதற்காக தற்போதுள்ள குற்றத் தரவுகளை செயலூக்கத்துடன் பயன்படுத்த வேண்டும்.
- *நீதி முறையை மறு வரையறை செய்தல்:* பெருமளவுக்கு அனைவரையும் உள்ளடக்கியதாக, பாதிக்கப்பட்டவரை மையப்படுத்தியதாக, பரிவுடன் கூடியதாக நீதி அமைப்பை மறுகட்டுமானம் செய்ய வேண்டும்; தாக்குதல்களிருந்து தப்பித்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாவும், குற்றவாளிகளை திருத்தத்துவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பதிலளிக்க கடமைப்பட்டவர்களாக இருக்கச் செய்வதாகவும் அது இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- *ஒட்டுமொத்த சமூதாய அணுகுமுறையை வளர்த்தெடுத்தல்:* நீதி, ஆறுதல் மற்றும் பெண்களுக்கும், சிறுமிகளுக்குமான பாதுகாப்பு ஆகியவவை மேலோங்கியிருக்கும் வகையிலான ஒரு சூழலை உருவாக்குவதில் சமூகங்களும் குடிமை சமூக அமைப்புகளும் நிறுவன அமைப்புகளும் ஈடுபடுவதன் மூலம் நிலையான பங்கேற்பை வலுப்படுத்த வேண்டும்.
- *அமைப்பு வாரியாக தனித்துவமான தீர்வுகளை செயல்படுத்துதல்:* பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர், சட்டங்கள் தவறாக பயன்படுத்தப்படக் கூடியவர்கள் ஆகியோருக்காக, அனைத்துச் சட்டங்களுக்கும், முன்னெச்செரிக்கைக் கைதுக்கான சட்டங்கள், விசாரணைக்கு முந்தைய காவல் சட்டங்கள் உள்பட, நிருபிக்கப்பட்ட சீர்திருத்தங்களை விரிவுபடுத்த வேண்டும்:
  - (a) பாதிக்கப்பட்டோர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, துணை மண்டல வாரியான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள், பணவீக்கத்திற்கேற்ற நிவாரணங்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகள் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989ல் உள்ள மறுவாழ்வு நடவடிக்கைகள்,
  - (b) லோக் அதாலத் மற்றும் சட்ட சேவை திட்டங்களை ஆக்கபூர்வமாக ஒருங்கிணைத்தல், வீடு தேடி வரும் நீதி அமைப்பு (தமிழ்நாட்டிலும் கர்நாடகத்திலும் மாநில அரசுகளால் வேறு திட்டங்களுக்கு இதுபோல் செயல்படுத்தப்படுகிறது), மற்றும்
  - (c) ஒட்டுமொத்த நீதி வழங்கல் அமைப்புக்கு சட்டப்பூர்வ சமூகத் தணிக்கைகள் (MGNREGA) சட்டத்தின் கீழ்.




படம் 01 (அட்டவணை 74): நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை முடிக்க மதிப்பிடப்பட்ட ஆண்டுகள் (2022 நிலுவை)

| | முடிக்க தேவைப்படும் ஆண்டுகள் | தண்டனை விகிதம் |
|---|---|---|
| பாலியல் தொழிலுக்காக குழந்தைகளை வாங்குதல், தூண்டுதல் | 19 | 12.7 |
| திருமணத்திற்காக கடத்தல் மற்றும் பலவந்தக் கடத்தல்: பெண்கள் | 19 | 49.4 |
| வன்புணர்வு முயற்சி: சிறுமிகள் | 19 | 25.0 |
| வன்புணர்வு: ST பெண்கள் | 19 | 32.0 |
| தாக்குதல்: SC பெண்கள் | 16 | 30.1 |
| தாக்குதல்: ST சிறுமிகள் | 16 | 30.6 |
| தாக்குதல்: சிறுமிகள் | 16 | 41.3 |
| வரதட்சணை சாவுகள் | 15 | 33.4 |
| தாக்குதல்: ST பெண்கள் | 15 | 22.3 |
| ITP சட்டத்தின் கீழ் மற்ற பிரிவுகள் | 15 | 40.7 |
| ST பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு | 15 | 0.0 |
| பெண்களின் கண்ணியத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடனான தாக்குதல் | 13 | 25.6 |
| தாக்குதல்: பெண்கள் | 13 | 25.0 |
| வன்புணர்வு: SC பெண்கள் | 13 | 41.5 |
| வன்புணர்வு: சிறுமிகள் | 13 | 45.5 |
| கணவன் அல்லது அவனது உறவினர்களால் கொடுமை | 12 | 17.7 |
| வரதட்சணை தடைச் சட்டம் | 12 | 35.8 |
| பெண்களை தற்கொலைக்குத் தூண்டுதல் | 12 | 17.5 |
| தாக்குதல்: SC சிறுமிகள் | 11 | 36.7 |
| வன்புணர்வு: SC சிறுமிகள் | 11 | 33.3 |
| பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு | 10 | 18.5 |
| அவமதிப்பு: பெண்கள் | 10 | 18.2 |
| வன்புணர்வு: ST சிறுமிகள் | 10 | 43.5 |
| மைனர் பெண்கள் கொள்முதல் | 10 | 14.1 |
| வன்புணர்வு | 9 | 27.4 |
| POCSO சட்டம் பிரிவு 8 & 10 | 9 | 33.9 |
| வன்புணர்வு: பெண்கள் | 9 | 25.2 |
| POCSO சட்டம் பிரிவு 12 | 9 | 19.9 |
| பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளுக்குப் பாதுகாப்பு சட்டம் | 8 | 31.7 |
| POCSO சட்டம் பிரிவு 4 & 6 | 8 | 31.3 |
| SC பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு | 8 | 4.3 |
| பெண்களுக்கு எதிரான மொத்த SLL குற்றங்கள் | 9 | 32.3 |
| பெண்களுக்கு எதிரான மொத்த IPC குற்றங்கள் | 13 | 23.3 |
| பெண்களுக்கு எதிரான மொத்தக் குற்றங்கள் | 12 | 25.3 |

படம் 01 (அட்டவணை 74): நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை முடிக்க மதிப்பிடப்பட்ட ஆண்டுகள் (2022 நிலுவை)

| வருடம் | |
|---|---|
| 1971 | முறைகேடான ஆட்கடத்தல் (தடுப்பு) சட்டம், 1978 |
| | வன்புணர்வு |
| 1988 | பெண்களை கடத்தல் மற்றும் பலவந்தமாக கடத்தல் |
| | வரதட்சணை தடைச் சட்டம், 1961 |
| 1989 | வரதட்சணை கொலைகள் |
| | கணவன் அல்லது அவனது உறவினர்களால் கொடுமை |
| | சதி தடுப்புச் சட்டம், 1987 |
| 1990 | பெண்களின் கண்ணியத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடனான தாக்குதல் |
| | பெண்களின் கண்ணியத்திற்கு அவமதிப்பு |
| 1994 | சிறுமிகளை இறக்குமதி செய்தல் (பிரிவு 366-B IPC) |
| | பெண்களை அநாகரீகமாக சித்தரித்தல் (தடை) சட்டம், 1986 |
| 2002 | பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்கள் |
| 2006 | மனிதக் கடத்தல் |
| 2014 | பெண்களை தற்கொலைக்குத் தூண்டுதல் |
| | வன்புணர்வு முயற்சி |
| | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு சட்டம், 2005 |
| 2014 | சதி தடுப்புச் சட்டம், 1987 - தரவுகள் நிறுத்தப்பட்டன |
| 2017 | வன்புணர்வுடன் கொலை/கும்பல் வன்புணர்வு |
| | கருச்சிதைவு |
| | அமிலத் தாக்குதல் |
| | அமிலத் தாக்குதல் முயற்சி |
| | மைனர் சிறுமிகளை விற்பனை செய்தல் |
| | மைனர் சிறுமிகளை விலைக்கு வாங்குதல் |
| | சைபர் குற்றங்கள்/தகவல் தொழில்நுட்ப சட்டம் |
| | பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் (POCSO) |

படம் 02 (அட்டவணை 03):
குற்றப் பதிவு: CII-யில் முதன்முதலில் வெளியிடப்பட்ட ஆண்டு (1953 முதல் இன்று வரை)

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு
m: +91 86680 91453 | e: womensrights@hrf.net.in | w: www.hrf.net.in